# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# இரண்டாந் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ........................................ | |

## பகுதி I

**விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 1 | (11) | 1 | (21) | 2 | (31) | 1 |
| (2) | 2 | (12) | 1 | (22) | 3 | (32) | 1 |
| (3) | 3 | (13) | 2 | (23) | 4 | (33) | 3 |
| (4) | 2 | (14) | 3 | (24) | 1 | (34) | 4 |
| (5) | 4 | (15) | 2 | (25) | 3 | (35) | 3 |
| (6) | 4 | (16) | 2 | (26) | 2 | (36) | 1 |
| (7) | 1 | (17) | 3 | (27) | 2 | (37) | 1 |
| (8) | 3 | (18) | 2 | (28) | 3 | (38) | 1 |
| (9) | 1 | (19) | 3 | (29) | 3 | (39) | 4 |
| (10) | 2 | (20) | 2 | (30) | 4 | (40) | 3 |

## பகுதி - II

*01. 1) ஆதியின் அருளினால் அருள் செயும் முகிலாம்.*
*2) நகை - பெயர் - சிரிப்பு, ஆபரணம்.*
*நகை - வினை - நகைத்தல்.*
*3) "எனக்குக் காது குத்தப் பார்க்கிறியளே! எனக்கு என்ன வயசிருக்கும்? சொல்லுங்க பாப்பம்?".*
*4) யாழ் மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி விழாவுக்கு வருகை தந்தார்.*
*5) நான் ஓவியம் வரைந்தேன்.*
*6) எழுவாய் - காற்று*
*பயனிலை - போயிற்று*
*7) மாலா கடைக்குச் சென்று பொருள்களை வாங்கி வீட்டுக்குத் திரும்பினாள்.*
*8) உதாரணந் தருதல்.*
*9) தழீஇ உயிரளபெடை*
*10) உயர்வு நவிற்சியணி*

*02.*

| | | |
|---|---|---|
| பொருளமைவும் அளவும் | - | 12 புள்ளிகள் |
| கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | - | 06 புள்ளிகள் |
| எழுத்து நுட்பங்கள் | - | 05 புள்ளிகள் |
| தலையங்கம் | - | 02 புள்ளிகள் |
| | | 25 புள்ளிகள் |

*03. சுருக்கம்.*

*எழுத்துக்களால் சொல்லும் சொல்லால் மொழி உருவாகி அதன் வளர்ச்சிக்கேற்ப மக்களின் வாழ்வும் உயர்கிறது. மொழியின் மூலமான கருத்துப் பரிமாற்றத்திற்காக புதிய சொற்கள் காரணத்துடனோ காரணமின்றியோ வளர்ச்சி பெறுகின்றன. இரு வேறுபட்ட மொழி பேசும் மக்கள் பழகுவதால் புதிய செய்திகள் அறியப்பட்டு அவையும் மற்றைய மொழியுடன் இணைகிறது. காலப் போக்கில் பிற மொழியுடன் இணைந்த சொல் அம் மொழியின் இயல்புக்கேற்ப மாறி மூலச் சொற்கள் போலவும் தோன்றுகின்றன.*

*04. 1) சந்தர்ப்பம் வாய்த்தல்.*
*அச்சமின்மை*
*தவறுதலாக ஈடுபடுதல்.*
*2) பயன் கருதாது நல்லது என்ற ஒரே காரணத்திற்காக அறம் செய்பவர்கள் நீண்ட காலம் பெயரும் புகழும் பெறுவர்.*

The National e-learning portal for The General Education

3) பயன் கருதாது அறம் செய்வது மனிதர்கள் ஆற்ற வேண்டிய நற் செயல்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
4) ஒருவரது சிறப்புக்களை புகழ்ந்து கூறுதல்.
5) (i) வள்ளல் - உலோபி
(ii) மாரி - கோடை

05. துண்டுப் பிரசுரம்
அமைப்பு - 04 புள்ளிகள்
உள்ளடக்கம் - 08 புள்ளிகள்
மொழி நடை - 03 புள்ளிகள்
15 புள்ளிகள்

## பகுதி - III

01. அ) மஞ்சள் வண்ண மரம் / மஞ்ச வண்ணா மரம் / மஞ்சமுண்ணா மரம் / மஞ்சவுணா மரம்
ஆ) ஆந்தை, கோட்டான், கூகை, நத்து.
02. அ) சேர, சோழ, பாண்டியர்
ஆ) பறம்பு மலை
03. அ) சடை
ஆ) வளைந்த இளம் பிறைச்சந்திரனை சடாமுடியில் அணிந்தவர் அழகு மிக்கவர்.
04. அ) உவமையணி.
ஆ) பிணத்துக்குப் போடப்பட்ட மாலை.
05. அ) தசரதன்
ஆ) கோசலை
06. அ)அறியாமை
ஆ) கேடு தருவனவற்றை கைக்கொண்டு ஆக்கம் தருவனவற்றை கைவிடுவான்.
07. அ) மூத்தம்மா
ஆ) பாச உணர்வு, /அன்பு
08. அ) ரகுமாமாமியால் காசிமுக்கு
ஆ) சடலம்
09. அ) பாம்பு, எள்
ஆ) சிலேடை
10. அ) மன்மதன்
ஆ) கண்ணீர் சிந்துதல்

02. 1) அ) முழக்கமிடும் அலைகளையுடைய அருவியானது கழங்கு விளையாடுவது போல முத்துக்களை வாரிக் கொண்டு வரும்.
ஆ) அடியவர்களுக்கு அருள் வழங்கும் கொடைத் தன்மை மிக்கவர், குறும்பலாவினடியில் கோயில் கொண்டிருப்பவர்.
2) அ) மலை போன்ற தோள்களை உடையவன். துதிக்கையால் செய்யும் வீரச் செயலுடைய ஆண் யானையை ஒத்தவன்.
ஆ) இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கள், குகன்.
3) அ) தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருப்பர்.
ஆ) நீரோடும் வாய்க்கால்.
4) அ) கையறுநிலை / சொந்த நாட்டை விட்டுப் பிரிகின்ற சோகமான மனநிலை.
ஆ) பாரி இருந்தால் பேச்சுக்கொடுப்பார்.
மதுவிலும், புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது என்ற கூற்றுக்கள் மூலம்.
5) அ) மூத்தம்மா
ஆ) சந்தனம் அரைத்து உச்சந்தலையில் பூசுதல்.
ஓதி பார்த்தல்.
நேர்த்தி வைத்தல்.
03. (அ)மூத்தம்மாவின் குணவியல்பு.
* பழைமையான பழக்க வழக்கத்தில் நம்பிக்கை உடையவள்.
* பேரக் குழந்தைகள் மீது அன்புடையவள்.

The National e-learning Portal for The General Education

* பேரக் குழந்தைகளுக்கு கதை சொல்லித் தூங்க வைப்பவள்.

* பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கு உடையவள்.
* அனுபவம் மிக்கவள்.
* தன்னை அலங்காரம் செய்வதில் பெருவிருப்புடையவள்.
* நகைச்சுவை உணர்வுடையவள்.
* கிராமப்புற மூடநம்பிக்கையில் மூழ்கி இருப்பவள்.

ஆ) வாழ்வியல் அம்சங்கள்

* மரத்தின் கீழ் பாயை விரித்து இளைப்பாறல்.
* நோய் பீடித்தால் வீட்டு வைத்தியம் செய்தல்.
* பனையோலை சீவி பெட்டி, பாய் இழைத்தல்.
* சந்தூக்கில் பிரேதம் எடுத்துச் செல்லல்.
* நேர்த்திக்கடன் செய்தல்.
* மூட நம்பிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
* சிறு பிள்ளைகள் ஊஞ்சல் ஆடல்.
* கரத்தை வண்டியில் பிரயாணம் செய்தல்.

04) இயற்கை அழகு.

* மலைப்பிரதேசம் மலை அழகு.
* குறிஞ்சிப் பூக்கள் அழகு, மல்லிகை அலரிப் பூக்கள்.
* மலைக்காற்று
* அருவி ஆர்ப்பரிப்பு
* நீர்வீழ்ச்சி அழகு
* பறவை இனங்களின் ஒலிகள்.
* மரங்களின் பசுமை வாய்ந்த இலைகள்.
* காற்றின் சலசலப்பு.
* வரகு, எள் முளைத்த அழகிய புன்செய் நிலங்கள்

பாரி மகளிர் துயரம்

* அற்றைத் திங்கள் பாடல் மூலம் (விளக்கல்)
* அத்தை,மாமன் இழந்த துயரம்.
* சங்கவை அங்கவை கூற்றுக்கள் மூலம்
  தந்தை இல்லை, தேர் இல்லை, பால் வார்க்கும் நிலவை எப்படி எடுத்துச் செல்வது.
* பறம்பு மலை குறவர், கானவர், எயினர்களை எப்படி விட்டுச் செல்வது என்ற ஏக்கம்.
* வரகு, எள் முளைத்து முதிர்ந்து கிடக்கும்.
  புன் செய்கை, கள் மணக்கும் குடிசை விட்டு பிரியும் துயர்.

**அல்லது**

அரிச்சந்திரன்

* சத்தியம்
* பதி இழந்தனம் ...... விளக்கம்.

தர்மன்

அறம் - இலட்சியம்

முக்தி இன்பத்தை தியாகம் செய்து சமநிலையில் நின்றவன் (விளக்குதல்)

The National e-learning Portal for The General Education

தசரதன்
இலட்சியம் - சத்தியம்
நிலைமாறும் அரசியலை விடுத்து நிலைமாறாத சத்தியத்தை கடைப்பிடித்தவன்.
தன் உயிரை தியாகம் செய்தவன் (விளக்கல்)

05. அ) * பெண்களை மயக்கும் இளமை, அழகு முகம், சிவந்த உதடுகள், அரும்பு மீசைப் பருவம்.
* பரிதாபத்துக்குரிய தோற்றம்.
பரிதாபத்தின் மொத்த வடிவம்.
செத்த சிரிப்பு (விளக்கம்)

ஆ) கையொப்பம் இடமுடியாது கல்லாத நிலை கண்டு தன் இதயம் கத்தியதும், கருகியதும். தன் காதல் உணர்வை எவ்வாறு வெளிப்படுத்துவான் என்ற கவலை.
வருங்காலம் இல்லை என வருந்துதல்.

06. அ) மாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்.
பாற்பானை, உழவுத் தொழில் பெருக வேண்டும், நாடு செழிப்படைய வேண்டும்.
உழவுத் தொழில் செழிப்படைய வேண்டும்.
எல்லோரும் சிறப்பாக வாழ வேண்டும் (விளக்கல்)

ஆ) தன் காதலி போய்ச் சேரும் வரை காற்றே வீசாதே என்றும் நிலவே எறிக்காதே என்றும் கூறல்.
* வாசனைப் பொருளோடு ஒப்பிடல்.
* கைவிட மாட்டேன் எனல்.
* உன்னை அடையாமல் விட்டால் காட்டுப்பள்ளி செல்வேன் எனல்.
* பலவாறு விளித்தல்.
* சம்மதம் கூறு எனக் கேட்டல்.
* கனவில் காணல்.

07. அ) கழிக்கத்தக்க பொருட் பிழைகளை எல்லாம் விலக்கி கடல் போன்ற நல்ல நூல்களையெல்லாம் அறிவுக்கு உணவாகக் கற்றுணர்ந்து அருவிகளால் நிரம்பி வழியும் பொதிகை மலையிலே நிலை கொண்டு அழகிய கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களின் மனமாகிய வானத்திலே இடித்து முழங்கி, கவிதை மழை பொழியும் படியாக காளமேகம் புறப்பட்டது என கவித்துவம் காட்டப்பட்டுள்ளது.

ஆ) வீட்டுக்கு இரப்போர் வந்து கதவைத் தட்டிய போது, இரப்பவரின் தட்டு நீட்டப்படு முன்னரே அன்னம் கொடுப்பதற்கும் தயாராக உள்ளவர்.